(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



# விவேகானந்த சபை கொழும்பு

# அகில இலங்கை

# 9 சைவசமய பாடப்பரீட்சை : 2020

## தரம் ஒன்பது

nselva.com



| | |
|---|---|
| காலம் அளவு | 2.00 மணி |

புள்ளிகள் : 100

| | |
|---|---|
| இல. | |
| மாணவர் சுட்டெண்: | |

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.**

## பகுதி - I

**1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இறைவன் காலனை உதைத்த நிகழ்வுடன் தொடர்புடையவர்.
   1. அபிராமிபட்டர் 2. கண்ணப்பர் 3. ஏமநாதர் 4. மார்க்கண்டேயர்
2. ‘‘மற்றுப்பற்று எனக்கு” என்ற பாடலில் பண்.
   1. கொல்லி 2. காந்தார பஞ்சமம்
   3. பழம்பஞ்சுரம் 4. நட்டராகம்
3. அறம் என்பது.
   1. இல்லறம் 2. தர்மம் 3. வீடு 4. கல்விப்பருவம்
4. ‘‘அமலனாதிபிரான்” என்ற பிரபந்தம் பாடியவர்.
   1. பெரியாழ்வார் 2. ஆண்டாள் 3. திருப்பாணாழ்வார் 4. திருமங்கையாழ்வார்
5. பஞ்சபுராணம் பாடும் போது நான்காவதாகப் பாடப்படுவது.
   1. தேவாரம் 2. திருப்பல்லாண்டு
   3. திருவாசகம் 4. திருவிசைப்பா
6. இறைவன் அனற்சோதி பிழம்பாகி குளிர்ந்து மலையாக ஓடுங்கிய இடம்.
   1. இமயமலை 2. திருவண்ணாமலை 3. கைலாயமலை 4. பொதிகைமலை
7. ‘‘ அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல” சகிப்புத்தன்மையை வலியுறுத்துபவர்.
   1. ஔவையார் 2. திருவள்ளுவர் 3. பாரதியார் 4. இளங்கோவடிகள்
8. சைவப்புலவராக விளங்கிய அருணாசலம் அவர்களுக்கு ‘‘தேசிகர்” என்னும் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தியவர்.
   1. சுவாமி விபுலானந்தர் 2. அவிநாசாநந்த அடிகள்
   3. ஆறுமுக நாவலர் 4. க. இராசரத்தினம்
9. இறைவன் மன்மதனை எரித்த தலம்.
   1. தில்லை 2. தோணியப்பர்
   3. திருக்குறுக்கை வீரட்டம் 4. திருச்செந்தூர்
10. “ காதலாகி கசிந்து ” என்ற திருப்பதிகம் பாடியவர்.
    1. அப்பர் 2. கச்சியப்பர் 3. ஞானசம்பந்தர் 4. நம்பியாண்டார்
11. சந்திரனுக்கு உரிய நாள்.
    1. ஞாயிறு 2. திங்கள் 3. புதன் 4. செவ்வாய்

12. தன் வாயையே தூய கலசமாகக் கொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்து பூசித்தவர்.
1. அனுமன் 2. திண்ணனார் 3. இராவணன் 4. நாதமுனி

13. ஆண்டாள் நாச்சியார் திருவவதாரம் செய்த நாள்.
1. ஆவணி சதுர்த்தி 2. ஆடிப்பூரம் 3. பங்குனி உத்தரம் 4. விஜயதசமி

14. அருட்பாடல்களை அருளிய ஆழ்வார்களின் எண்ணிக்கை
1. 06 2. 08 3. 63 4. 12

15. கேரள மாநிலத்தில் உள்ள பிரசித்திப் பெற்ற கோயில்.
1. பழனி முருகன் 2. உச்சிப்பிள்ளையார்
3. சபரிமலை 4. தஞ்சை பெரிய கோவில்

16. திருச்சதகம் எத்தனைப் பாடல்கள் கொண்டது.
1. 99 2. 100 3. 102 4. 101

17. சொக்கப்பானை கொளுத்தும் நிகழ்வு நடைபெறும் நாள்.
1. தீபாவளி 2. நவராத்திரி
3. திருக்கார்த்திகை 4. கந்தசஷ்டி

18. தந்தைக்கு பிரணவப் பொருளை உபதேசித்தவர்.
1. பிள்ளையார் 2. சண்டேசுவரர் 3. முருகன் 4. வீரபாகு

19. மண்டோதரியின் கணவர்
1. இராமன் 2. பாண்டியன் 3. இராவணன் 4. விஸ்வாமித்திரர்

20. சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படும் மாதம்
1. பங்குனி 2. சித்திரை 3. மாசி 4. மார்கழி

21. நாட்டார் வழிப்பாட்டுக் கதையின் படி காத்தவராயராகப் பிறந்தவர்.
1. வீரபத்திரர் 2. ஐயனார் 3. பெரிய தம்பிரான் 4. முருகன்

22. ஆன்மாவுக்கு நல்லுணர்வு வராமல் அதன் அறிவைத் தடுத்துக் கொண்டிருப்பது.
1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. வேதம்

23. மூவாயிரம் பாடல்களை கொண்டது.
1. திருப்புகழ் 2. பெரியபுராணம் 3. நன்னெறி 4. திருமந்திரம்

24. தந்தை இறந்த பின் அவருக்காக அனுட்டிக்கப்படும் விரதம்.
1. ஆடி அமாவசை 2. பௌர்ணமி 3. சித்திரா பூரணை 4. தைப்பூசம்

25. ஆண்டாள், திருப்பாவையில் போற்றப்படும் கடவுள்
1. திருமால் 2. சரஸ்வதி 3. ஆழ்வார் 4. துர்க்கா

26. இந்துக்களின் கலைத்திருவிழா எனப்படுவது.
1. சிவராத்திரி 2. நவராத்திரி 3. தீபாவளி 4. தைப்பொங்கல்

27. இந்துக்களின் பெருமையை உலகறியச் செய்தவர்.
1. விபுலானந்தர் 2. விவேகானந்தர் 3. ஞானப்பிரகாசர் 4. தனிநாயகஅடிகள்

28. அறுபதாம் ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்.
1. வெள்ளிவிழா 2. பொன் விழா 3. முத்து விழா 4. மணி விழா

29. இறைவனின் ஐந்தொழிலை விளக்குவதாக அமைந்த வடிவம்
1. நடராசர் 2. அர்த்தநாரீஸ்வரர் 3. சிவலிங்கம் 4. பிட்சாடனர்

30. திருவிளக்கிடும் திருப்பணி புரிந்து இறையருள் பெற்றவர்.
1. பூசலார் 2. நமிநந்தியடிகள் 3. அப்பூதியடிகள் 4. தருமன்

**(30x1 = 30 புள்ளிகள்)**

## பகுதி - II

**ஆ. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. இறைவனால் இனி பூசைக்கு பயன்படும் அருகதை கிடையாது என சபிக்கப்பட்ட மலர் எது?

.....

2. நம்பியாரூரர் என அழைக்கப்படுவர் யார்?

.....

3. உணவு உண்பதற்கு முன் பாடக்கூடிய தேவாரம் எது?

.....

4. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?

.....

5. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனம் செய்தல் ஆகாது?

.....

6. சைவ சமயத்தவர்கள் ஓத வேண்டிய தமிழ் வேதங்கள் யாவை?

.....

7. பாத யாத்திரை என்றால் என்ன?

.....

8. கோளறு பதிகம் பாடியவர் யார்?

.....

9. இராசிகளின் மொத்த எண்ணிக்கையைத் தருக.

.....

10. அம்மனுடைய வாகனம் எது?

.....

11. கைவிசேடம் பெறும் பண்டிகை யாது?

.....

**(11** புள்ளிகள்**)**

12. பின்வரும் சிவபுராணத்தில் அடுத்து வரும் நான்கு அடிகளை மட்டும் எழுதுக.

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**

.....

.....

.....

.....

**( 4** புள்ளிகள்**)**

## பகுதி - III

**1. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.**

1. "மற்றுப் பற்று ....."
2. "மங்கையர்க்கரசி ....."
3. "காப்பதோர் வில்லும் ....."
4. "துஞ்சலும் துஞ்சல் ....."

**(2x7 =14** புள்ளிகள்**)**

**2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் ஐந்தினை எழுதுக.**

1. "அல்லவை தேய ....."
2. "சிறுமையுள் நீங்கிய....."
3. "செய்யாமல் செய்த உதவிக்கு....."
4. "சொற்கோட்டம் ....."
5. "செப்பம் உடையவன் ....."
6. "தீயினால் சுட்ட புண் ....."

**(1x5 = 5** புள்ளிகள்**)**

## பகுதி - IV

## எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**1.**
1. அடிப்படை மனித விழுமியங்கள் எவை?
2. சகிப்புத்தன்மை என்றால் என்ன?
3. மனிதனின் வாழ்க்கையில் உள்ள படி நிலைகளைத் தருக.

**(9** புள்ளிகள்**)**

**2.**
1. பஞ்சாங்கத்தின் உறுப்புக்களை தருக.
2. இலங்கையில் சைவ சமய வளர்ச்சிக்காக அருத்தொண்டாற்றிய சான்றோர்கள் மூவரது பெயர்களை தருக.
3. சைவப் புலவர் அருணாசல தேசிகர் ஆக்கிய நூல்கள் சிலவற்றை தருக.

**(9** புள்ளிகள்**)**

**3.**
1. இல்லறத்தில் வாழும் ஒருவர் செய்யும் பிதிர் வழிபாடுகள் சிலவற்றை எழுதுக.
2. தேய்பிறையில் வரும் சதுர்த்தி எவ்வாறு அழைக்கப்படும்?
3. உழவர்கள் வயலில் விதை விதைத்து பயிர் செய்யும் முயற்சியை ஆரம்பிக்கும் மாதம் எது?

**(9** புள்ளிகள்**)**

**4.**
1. யோக நெறி மூலம் இறையருள் பெற்ற இருவரது பெயர்களை தருக.
2. திவ்வியம் என்றால் என்ன?
3. தில்லையில் ஓடாது நின்ற தேரை பாடல் பாடி நகர்த்தியவர் யார்? **(9** புள்ளிகள்**)**

**5.**
1. எமது நாடு திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பட்ட காரணம் யாது?
2. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
3. முற்காலத்தில் மாத்தளை எந்தப் பெயரால் அழைக்கப்பட்டது?

**(9** புள்ளிகள்**)**